*மே 21, 2015*

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

*இனிமையான குழந்தாய்: நீ ஒருவரின் பெயர் மற்றும் ரூபத்தில் சிக்கிக்கொண்டால், நீ முற்றிலும் முடிந்து விடக்கூடும். அதிர்ஷ்டம் நிறைந்த குழந்தைகள் மட்டுமே உடல் உணர்வை மறக்கும் முயற்சியையும் உடலற்றவராகி தந்தையை நினைவு செய்யும் முயற்சியையும் செய்யகூடியவர்களாக இருக்கின்றார்கள். தந்தை ஒவ்வொரு நாளும் விளக்குகிறார்: குழந்தைகளே, நீங்கள் உடல் உணர்வை மறந்துவிடுங்கள். தந்தை கூறுகின்றார்: நீங்கள் இப்போது உடலற்றவராக வீடு திரும்ப வேண்டும். உங்களை ஒரு ஆத்மா என கருதி என்னை நினைவு செய்யுங்கள். ஆத்மா தான் தூய்மையற்றதாகிவிட்டது.*

இனிமையான பாபா, நாள் பொழுதில் நான், உடலற்ற ஆத்மா, நான் இப்போது வீட்டிற்கு திரும்ப போகிறேன் என்ற விழிப்புணர்வு கொண்டிருப்பேன் *என்று மீண்டும் உறுதி செய்துக் கொள்கின்றேன்.* நான் இந்த உடலை இங்கேயே விட வேண்டும். நான் தொடர்ந்தும் தந்தையின் நினைவில் மட்டுமே இருந்து கர்மாதீத் ஆகும்போதுதான் மட்டுமே என்னால் உடலை விட முடியும். என்னுடைய புத்தியில் நான் முதலில் இங்கே உடல் இல்லாமல் வந்தேன் எனவும் நான் மகிழ்ச்சி என்னும் கர்ம உறவுக்குள் கட்டப்பட்டு பின்னர், இராவண இராஜ்ஜியத்தின் விகார பந்தனத்தில் சிக்கினேன் என்பதும் என் புத்தியில் இருக்கின்றது. பாபா இப்போது என்னை விடுவிக்கின்றார்.

**சமார்த்தி அல்லது சக்தி**

**நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.**

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

*பாபா ஆத்மாவிற்கு: நீ உன்னுடைய எண்ணங்கள், சொற்கள் அல்லது செயல்கள் மூலம் யாருக்கும் துன்பம் ஏற்படுத்தக் கூடாது. தந்தை உங்களை அவ்வாறான தெய்வங்களாக ஆக்க வந்துள்ளார். அவர்கள் யாருக்கும் துன்பம் கொடுப்பார்களா? தந்தை ஒவ்வொரு நாளும் உங்களுக்கு போதிக்கவும் நடத்தை முறைகளை கற்பிக்கவும் வருகின்றார். மேலும் நீங்களே வலுவானவராக இருக்க வேண்டும்.*

நான் இன்று துன்பம் கொடுக்கவோ துக்கம் எடுக்கவோ மாட்டேன் என உறுதியாக இருக்கிறேன். நான் வலிமை மற்றும் கருணை மனோபாவத்தை தழுவிக்கொள்வேன்.

**திருஷ்டி அல்லது தூய பார்வை**

*பாபா ஆத்மாவிற்கு: நீ உலக நன்மைக்கான பணியில் தொடர்ந்து மும்முரமாக இருக்கும் உலகத்திற்கு ஆதரவு அளிக்கும் மூர்த்தியாக ஆகுவாய்யாக.*

என்னுடைய திருஷ்டியில் தொடர்ந்தும் உலகில் உள்ள எல்லையற்ற ஆத்மாக்களை நான் வைத்துள்ளேன். எனக்கு முன்னால் அனைத்து ஆத்மாக்களையும் பார்க்கும் போது, நான் சற்றும் கூட கவனக்குறைவாக இருக்க முடியாது. என்னுடைய எல்லையற்ற திருஷ்டியின் மூலம், நான் பாப்தாதாவிடமிருந்து ஆதரவு அளிக்கும் மூர்த்தியாக இருப்பதற்கான ஆசீர்வாதங்களைப் பெறுகின்றேன்.

**ஓர் அலையை உருவாக்குதல்**

**நான் மாலை *7:00* மணி முதல் *7:30* மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.**